செய்தி வெளியீடு எண்: 613 நாள்:24.08.2020

# சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தின் 15 ஆவது பட்டமளிப்பு விழாவில் (இணைய வழி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை

**(24.8.2020)**

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.**

**சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 15 ஆவது பட்டமளிப்பு விழாவில் இணைய வழியில் பங்கேற்று, சிறப்புரை ஆற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.**

**இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள**

**இந் நிறுவத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர்**
**டாக்டர் ந.மா.வீரையன் அவர்களே!**

**இந்நிறுவனத்தின் துணை வேந்தர்**
**திரு. ராகேஷ்குமார் ஷர்மா அவர்களே!**

ஆசிரியப் பெருமக்களே!

நாளைய உலகில் பல்வேறு துறைகளில் சாதிக்கப் பிறந்த
மாணவச் செல்வங்களே!

மாணவச் செல்வங்களை ஈன்றெடுத்த பெற்றோர்களே!
பத்திரிகை துறை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கல்லூரி வாழ்க்கையில் ஒரு பட்டாம்பூச்சியைப் போல உலா வந்த உங்களுக்கு, இன்று முதல், இந்த உலகத்திற்கான உங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டிய நேரம் தொடங்கி விட்டது.**

**"அர்ப்பணிப்பு மற்றும் பொதுமக்கள் சேவைக்கான முழுமையான உணர்வுகளையும், சிறந்த தொழில் திறமைகளையும் கொண்ட மருத்துவர்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

அதனடிப்படையில், மாணவர்கள் பெற்ற கல்வியை சமூக நலனுக்குப் பயன்படுத்தவும், சமூகத்தின் அறிவுசார்ந்த நிலையை உயர்த்தவும் பல்கலைக்கழகங்கள் தான் உறுதுணையாக உள்ளன. இந்த நோக்கங்களின் அடிப்படையில்தான் சவீதா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மாணாக்கர்களுக்கு சிறந்த கல்வி அளித்து சிறந்த மருத்துவர்களாகவும் சிறந்த பொறியாளர்களாகவும், பிற துறை வல்லுநர்களாகவும் உங்களை உருவாக்கி வருகிறது. இந்நிறுவனம் முதன்முதலில் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஒரு முன்மாதிரி பல் மருத்துவக் கல்லூரியை தொடங்கியது. இன்று 15 உறுப்புக் கல்லூரிகளை தன்னகத்தே கொண்டு, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பல்வேறு துறைகளில் பயிலும் ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக வளர்ந்திருப்பது இந்நிறுவனத்தின் கல்வித் திறனைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அனைத்து மாணாக்கர்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய

சாதனைகளை அடைய உங்களுக்கெல்லாம் உறுதுணையாக இருக்கும் சவீதா நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர் மரியாதைக்குரிய மருத்துவர் ந.மா.வீரையன் அவர்களுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றப் பணியாளர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எனது பாராட்டுதல்களை உரித்தாக்குகின்றேன்.

**மனித சமுதாயம் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்** என்ற உயரிய நோக்கத்துடன், சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சுமார் 60 லட்சத்திற்கும் மேற்பட்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளித்துள்ளது என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உலகை அச்சுறுத்தும் கோவிட் 19 தொற்று நோயை விரட்ட இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு தனது முழு ஒத்துழைப்பை வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது.

மேலும், இந்த நிறுவனம் இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் முதல் 50 இடங்களில் ஒன்றாக இடம்பெற்றிருப்பது என்பதும் பெருமைக்குரியது.

**"நலமான மாநிலமே, வளமான மாநிலம்"** என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அவற்றில் ஒரு சிலவற்றை மாணவச் செல்வங்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

- கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 17ல் இருந்து 16 ஆகவும், பேறுகாலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில் 2030இல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகளை, நாம் எடுத்த பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளால் **இப்போதே அடைந்து விட்டதும்** ஒரு சரித்திர சாதனையாகும்.
- டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீதம் பிரசவங்கள் மருத்துவமனையில் நடைபெறுவது, இந்த திட்டத்தின் வெற்றியை காட்டுகிறது.
- **“முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம், அம்மா மருந்தகம்”** போன்ற பல முன்னோடி திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு 5 வருடங்களாக தொடர்ந்து தேசிய அளவில் மிகச் சிறந்த மாநில விருதை பெற்று வருகிறது. உடல் உறுப்பு தானத்தில்

சிறந்த மருத்துவமனைக்கான விருது, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மூளைச்சாவு அடைந்தவரிடம் இருந்த கைகளை தானமாக பெற்று, திண்டுக்கல்லைச் சார்ந்த திரு.நாராயணசாமி என்பவருக்கு பொருத்தி **நாட்டிலேயே முதல் முறையாக கைகள் மாற்று அறுவை சிகிச்சை சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டது.**
- **மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்,** 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது தவிர, 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.
- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 12,823 மருத்துவர்கள், 14,588 செவிலியர்கள் உட்பட 32,660 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு அரசு, அரசு மருத்துவமனைகளில் புற்று நோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகளில் Linear Accelerator என்ற உயர் தொழில் நுட்பக் கருவி நிறுவப்பட்டு வருகிறது.
- சென்னை அடையாறு, புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணி, நிறைவடையும் தருவாயில் உள்ளது.

- காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மேண்மைமிகு மையம்** ஏற்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது, மிகச் சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகின்ற காரணத்தினால், **தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகிறது.**
- வெளிமாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும், தரமான மருத்துவ சிகிச்சையைக் குறைந்த செலவில் பெறுவதற்காக, பலரும் தமிழ்நாட்டிற்கு வருவதன் மூலம், **தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது.**

**மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் கொள்கையாகும்.**

இதன்படி சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை ஓமந்தூரார் தோட்ட வளாகம், கோயம்புத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை, புதுக்கோட்டை மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 700 மருத்துவ பட்டப்படிப்பு இடங்களுடன் துவக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே செயல்பட்டு வரும் 10 அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 650 மருத்துவ இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக, கடந்த 8 ஆண்டுகளில் 1350 கூடுதல் மருத்துவ பட்டப்படிப்பு இடங்கள் உருவாக்கப்பட்டு, மருத்துவம் படிக்க விரும்பும் மாணாக்கர்களின் கனவை நனவாக்கியது மாண்புமிகு அம்மாவின் அரசு.

**அதிக அளவில் தமிழ்நாட்டைச் சார்ந்த கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மேலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அம்மாவின் அரசு கொள்கை முடிவு எடுத்தது.**

அதனடிப்படையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசுக்கு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக மிகக் குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, அரியலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், திருப்பூர், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளுக்கு உடனடியாக நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தற்போது தமிழ்நாட்டிலுள்ள 3250 மருத்துவப் படிப்பு இடங்களுடன், 11 மருத்துவக் கல்லூரிகளுக்கான 1650 புதிய மருத்துவ பட்டப்படிப்பு இடங்களை சேர்த்து 2021–22 ஆண்டு முதல், மாணவர் சேர்க்கை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவராகும் கனவினை மெய்ப்பிக்கும் வகையில் **6 முதல் 12 வரை அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் உள் ஒதுக்கீடாக 7.5 விழுக்காடு வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு அவசரச் சட்டம் பிறப்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கையில், **''விழித்திருங்கள், விலகி இருங்கள், விதிமுறைகளை மதித்து இருங்கள்''** எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதை நீங்களும் நானும் அறிவோம்.

நமது கூட்டு முயற்சியினால், நோய் தொற்றிலிருந்து குணமடைந்து இல்லம் திரும்புவோரின் சதவிகிதம் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல், உயிர் இழப்போரின் சதவிகிதமும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவு. இதற்காக மருத்துவ வல்லுநர்கள், பொது சுகாதார வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், நடுநிலையாளர்கள் எல்லாம் தொடர்ந்து தமிழ்நாட்டை பாராட்டி வருகின்றனர்.

மருத்துவத்துறையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அனைத்து நவீன சிகிச்சைகளும், தமிழ்நாட்டு மக்களுக்கு இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நவீன வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தி வருவதால், அதிக அளவில் நோயாளிகள் குணமடைந்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். எனவேதான், **தமிழ்நாடு சுகாதாரத்துறையில் இந்தியாவில் உள்ள முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.**

இன்றைக்கு பட்டம் பெற்று, பல்கலைக்கழகத்திலிருந்து, வெளிவரும் மாணாக்கர்களாகிய நீங்கள், இந்த உலகமே பயனடையும் வகையில் சாதனைகளை நிகழ்த்த, முதலில் சரியான இலக்கு மற்றும் அதை அடையக்கூடிய வழிமுறைகள் ஆகியவற்றை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அவ்வழிமுறைகளில் இடைவிடாது செயல்பட்டால் உங்களது லட்சியத்தை வெகு சுலபமாக அடைந்து, வெற்றி அடையமுடியும்.

வாழ்க்கையில் நாம் பல பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது, அந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண, நாம் சரியான இலக்கை நிர்ணயித்து, பாதையை வகுத்து, சரியான திசையில் செல்லும் முடிவே பெரிய வெற்றியை தரும்.

ஒருவர் எவ்வளவுதான் திறமையானவராக இருப்பினும், வேகமாக செயல்படக் கூடியவராக இருப்பினும். சரியான பாதையில் செல்லவில்லை என்றால் அவர் அவரது இலக்கினை அடைவது இயலாத காரியமாகும்.

மாணாக்கர்களாகிய உங்கள் வாழ்விற்கு சரியான திசையை தேர்ந்தெடுப்பது முக்கியமான ஒன்றாகும். **வெற்றிக்கு வேகமாக ஓடுவதைக் காட்டிலும், சரியான திசையில் ஓடுவது முக்கியமான காரணமாக இருக்கிறது.** எனவே உங்கள் திசையை, வழியை சரியாக தீர்மானியுங்கள். பயணம் வெற்றி பெறும்.

**திட்டமிடுங்கள்! உழையுங்கள்!**

**வெற்றி பெறுங்கள்!**

- **“என்கடன் பணிசெய்து கிடப்பதே” என்றனர் ஆன்றோர் பெருமக்கள்.**
- **“ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்பேன்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**
- **“காட்டில் நிலவாய், கடலில் மழையாய் பிறந்தால் யாருக்கு லாபம் ?**

  **பகையில் துணையாய், பசியில் உணவாய் இருந்தால் ஊருக்கு லாபம்”**

  **என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.**

**மாணாக்கர்களாகிய நீங்கள் வருங்காலத்தில், பொது மக்களுக்கு பயன்தரத்தக்க ஒரு வாழ்க்கையை வாழ்வதே சிறந்ததாகும்** என்பதை இங்கே வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம் **மக்களின் நோயைப் போக்கும் புனிதப் பயணத்தைச் சிலரும், சிறந்த பொறியாளர்களாக வேண்டும் என்ற பயணத்தைச் சிலரும், பிற துறை வல்லுநர்களாக வேண்டும் என்ற பயணத்தைச் சிலரும் தொடங்குகிறீர்கள். இந்தத் தருணத்தில் உங்கள் மனதில் எழும் புனிதமான எண்ணங்கள், உங்கள் கரங்களுக்கும் இதயங்களுக்கும் வழிகாட்டியாக அமையட்டும்** என வாழ்த்துகிறேன்.

இந்த நிகழ்வினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**